## தலைப்பு – 284 வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கறள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 யூலை 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூலை 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்குகளை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2022 திசெம்பர் 13 ஆம் திகதிய இல. 2022/05 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டிக்கமைய மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2023 பெப்ரவரி 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தால் 2023 பெப்ரவரி 27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் நிலவிய பாரிய தவறுகள் காரணமாக அவற்றை நீக்கி திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2023 மே 24 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இதன் படி, தாமதக் காலம் 02 மாதங்கள் 24 நாட்களாகக் காணப்பட்டன. | குறித்த நிதிக்கூற்றுக்கள் குறிப்பிடப்பட்டவாறு 2023 பெப்ரவரி 27 ஆம் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 ஏப்ரல் 03 ஆம் திகதிய கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளைச் சீராக்குவதற்காக 2023 ஏப்ரல் 19 ஆம் திகதி நிதிக்கூற்றுக்கள் அகற்றப்பட்டிடுள்ளதாக. | அரசாங்க கணக்குகள் வழிகாட்டல்களுக் கமைய வருடாந்த நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட்டு குறித்த தினத்தில் கணக்காய்விற்கா க சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) கட்டுநிதி மீதி**

கட்டுநிதி மீதி கணக்கீடு செய்யப்படுகையில் பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களப் புத்தகங்கள், திறைசேரி நிதிக் கூற்றுக்களுடன் ஒப்பிடப்படுகையில் வைப்புக் கொடுப்பனவுகள் மற்றும் மொத்த தேறிய செலவினங்களின் ரூபா 24,522 தொகை ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் இது கட்டுநிதி இணக்கக் கூற்றுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | திறைசேரிக்கு அறிவித்து சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாக | திணைக்களத்திற்கு உரித்தான செலவினத்தை சரியாக இனங்கண்டு தேவையான சீராக்கங்களை கட்டுநிதி இணக்கக் கூற்றுடன் சீராக்கம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஆ) முற்பணக் கணக்கு மீதிகள்**

முற்பணக் கணக்குகளில் ஆண்டின் இறுதியிலான மீதிகளை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபன விதிக் கோவையின் ஓஓஐஏ ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் 4.6 ஆம் பந்திகளின் பிரகாரம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததன் காரணமாக இறந்த, ஓய்வுபெற்ற, சேவையைவிட்டு விலகிச் சென்ற மற்றும் பணி நீக்கம் செய்யப்பட்ட 59 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,992,636 தொகையான கடன் மீதி | நிலுவையாக உள்ள கடன் மீதி ஏற்ற நடவடிக்கை பின்பற்றப்பட்டு உடனடியாக அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேலும் அறவிடப்பட வேண்டியுள்ள கடன் மீதிகளை அறவிட்டுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

நிலுவையாகக் காணப்பட்டதுடன் இதில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்குரிய கடன் மீதி ரூபா 906,516 தொகையும் 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலத்திற்கு உரித்தான கடன் மீதி ரூபா 924,805 தொகையும் காணப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செய்யப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 104(3) மற்றும் (4) | வாகன விபத்து நேர்ந்த நாள் முதல் மூன்று மாதங்களிற்குள் முழுமையான ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய் போதிலும் 2019 ஆம் ஆண்டின் போது விபத்திற்குள்ளான தென் பிராந்திய அலுவலகத்திற்கு உரித்தான லுணுகம்வெஹெர தோட்டத்தின் நுழைவு அலுவலகத்தில் ஓர் வாகனத்தின் ஆய்வு நடவடிக்கை பூர்த்திசெய்திருககவில்லை. | 2020.07.15 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற இவ் விபத்து தொடர்பாக நி.பி. 104(4) இறுதி அறிக்கையில் குறைபாடுகள் சில தொடர்பாக மீள தகவல்கள் கோரப்பட்டிருந்ததுடன் இவை பெறப்பட்டதை அடுத்து நி.பி. 104(4) ஆய்வு பூர்த்தி செய்யப்படலாம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஆய்வு நடவடிக்கைகள் விரைவாக பூர்த்திசெய்யப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 395(இ) மற்றும் (ஊ) மற்றும் 2017திசெம்பர் 28 ஆம் திகதிய 04/2017 ஆம் இலக்க உள்ளகச் சுற்றறிக்கை | ஒவ்வொரு மாத இறுதியிலும் உள்ள கொடுக்கல்வாங்கல்களின் நிலைதொடர்பாக அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் தென்மாகாண சபை வலய அலுவலகத்தில் 2022 | தூமதங்களைத் தவிர்த்து வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களை அனுப்பிவைப்பதற்காக இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களை முறையாகத் தயாரித்து குறித்த தினத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆம் ஆண்டிற்கான மாதாந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுத் தயாரிப்பு 04 மாதங்களுக்கும் கூடுதலான காலம் வரை தாமதமாகிக் காணப்பட்டது. | | |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 30/2016 இன் 31 ஆம் பந்தி | திணைக்களத்தின் பெரும்பாலான வாகனங்களுக்கான எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தேவையான ஒதுக்கீடுகள் பெறப்பட்டதை அடுத்து எதிர்காலத்தில் எரிபொருள் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி, எரிபொருள் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2020 ஒக்டோபர் மாதம் 02 ஆம் திகதிய 05/2020 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02(அ) பந்தி | ஓட்ட நிலையில் இல்லாத மற்றும் திருத்தங்கள் வினைத்திறனற்ற வாகனங்கள் 2020 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் கைதவிர்க்கப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டுள்ள தென் வலய அலுவலகத்திற்கு உரித்தான 05 மோட்டார் சைக்கிள்களும் யானை லொறியும் அவ்வாறு கைதவிர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கைதவிர்க்கப்படுவதற்கு ஏற்ற வாகனங்களை இனங்காணும் விசேட மீளாய்வுக் குழு ஒன்று பிரதி பணிப்பாளர் (நிர்வாகம்) இன் தலைமையின் கீழ் நியமிக்கப்பட்டு கைதவிர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | ஓட்ட நிலையில் இல்லாத மற்றும் திருத்தங்கள் வினைத்திறனற்ற வாகனங்கள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கைதவிர்ப்பிற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வெளிநாட்டு உதவித் செயற்திட்டங்கள் - சுற்றாடல் முறைமையைப் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டம் (ESCAMP)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினூடாக ரூபா 0.72 மில்லியன் தொகையான ஏற்பாட்டின் கீழ் செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த மொனறாகலை மாவட்டத்தின் ரத்துகல பிரதேசத்தின 105 குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் 05 செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 232.93 மில்லியன் தொகையான ஏற்பாட்டின் கீழ் பூர்த்திசெய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த மேலும் 09 செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட முடியாதிருந்தன. மேலும், உடவலவ தேசிய பூங்காவினூடாக ஒரு குடும்பத்திற்காக 80 பேர்ச் வெற்றிலை பயிர்ச்செய்கை செய்வதற்காக வசதியளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 0.770 மில்லியன் | நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் கொரோனா பேரழிவு நிலை காரணமாக இந் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்த இயலாது போயிற்று. வெற்றிலை பயிர்செய்யும் வசதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயிரிடப்படும் பயிர்களுக்கு ஏற்பட்ட நோயின் காரணமாக இவ் வெற்றிலைப் பயிர்கள் சிறிய காலப்பகுதியிலேயே பாதிப்புற்றிருந்ததுடன் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியால் இறக்குமதிக் கட்டுப்பாடு அமுலாக்கப்பட்டதைத் தொடர்ந்து பசளை வகைகள், இரசாயன மருந்துப்பொருள் வகைகள், நாட்டில் பற்றாக்குறையாகக் காணப்பட்டதன் காரணமாக இப் பயிரினங்களுக்கு உரிய காலத்தில் தேவையான சிகிச்சை மேற்கொள்ளப்பட | வெளிநாட்டு உதவி செயற்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் அதே விதத்தில் பூர்த்தி செய்யப்பட்டு ஆக்கபூர்வமாக மேற்கொண்டு நடாத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவிடப்பட்டு 14 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருந்த வெற்றிலைப் பயிர்கள் நோய்க்கு உட்பட்டு விளைச்சலைப் பெற முன்னர் அழிவுற்றிருந்தது. | முடியாதிருந்தது, | |
| **(ஆ)** | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் 30 உத்தியோகத்தர்களுக்காக பொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட இலங்கை இயலுமை வழிகாட்டி (SLQF) 3 ஆம் கட்டத்திற்கு உரித்தான வனசீவராசிகள் முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா பாடநெறியின் 2017/ 2018 ஆம் குழுக்களுக்காக அறவிடப்பட்ட பாடநெறிக் கட்டணத்தொகையான ரூபா 3,300,000 இல் 2019∴ 2020 ஆம் குழுவிற்காக இதனைப் பார்க்கிலும் ரூபா 11,700,000 அதிகளவில் ரூபா 15,000,000 தொகையான ஓர் கட்டணம் அறவிடப்பட்டிருந்ததுடன் இப் பாடநெறிக்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா 38,819,579 ஆகக் காணப்பட்டமையால் ஒரு உத்தியோகத்தருக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூபா 1,293,333 ஆகக் காணப்பட்டது. இப் பல்கலைக்கழகத்தினூடாக நடாத்தப்படும் SLQF 8 ஆம் கட்டத்தின் பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவின் ஒரு மாணவனின் கட்டணம் ரூபா 250,000 ஆகக் காணப்பட்டமையும், | உத்தியோகத்தர்களின் கடமைகளின் தன்மைக்கேற்ப கள ஆய்வுப் பரிசோதனை நாடெங்கிலும் பரந்துள்ள பல்வேறு பாதுகாப்பு பிரதேசங்களுக்கு அண்மையில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமையால் அதிகளவிலான செலவை ஏற்க நேரிட்டமையாலும், தங்குமிடப் பயிற்சி கிரிதலை பயிற்சி மையத்திற்கு அப்பால் மேற்கொள்ளப்பட நேர்ந்தமையாலும் ஒரு உத்தியோகத்தருக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிசார் கடப்பாடுகள் அதிகளவு மீதியைக் கொண்டிருந்தது. இந் நிலை கொவிட் நிலை உச்சநிலையை எட்டியிருந்த காலப்பகுதியின் போதானமையால் இரு நிறுவனங்களுடன் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாடு மற்றும் அன்யோன்ய புரிந்துணர்வின் அடிப்படையில் ESCAMP செயற்திட்டத்திற்கும் அறிவிக்கப்பட்டு குறித்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | வெளிநாட்டு கடன் உதவியின் கீழ் செயற்படுத்தப்படும் இத்தகைய செயற்பாடுகள் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். |

கொழும்பு பல்கலைக்கழகத்தைத் தேர்ந்தெடுக்கையில் உலக வங்கியில் செயற்பாட்டு வழிகாட்டல் பின்பற்றப்பட்டிராமையும் பல்கலைக்கழகத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 21,590,108 இற்கு உரித்தான பட்டியல்களின் மூலப் பரிரதியும் ரூபா 12,785,500 தொகையான முற்பணத்தொகையும் தீர்க்கப்படுவதற்கு உரித்தான சான்றுறுதிச்சீட்டுக்களின் மூலப் பிரதிகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமை போன்ற விடயங்களின் படியும் இச் சிக்கனமான கொடுக்கல்வாங்கலாக அவதானிக்க முடியாதிருந்தது.

## 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்த செலவினம் ரூபா 1,752,100 தொகையான தெமோதர ஆயகபொல்ல மற்றும் ஆனபல்லம ஹந்தபானாகல யானை அகழியை மீளமைக்கும் பெறுகைச் செயற்பாட்டின் போது பெறுகைக் குழுவின் அங்கீகாரம் பெறப்படாது, தொழிநுட்ப மதிப்பீடின்றி எழுத்து மூல உடன்படிக்கை ஒன்று இன்றி குறித்த செயற்பாட்டை ஒப்படைத்தமையால் இது 2006 அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் | பிரதேச செயலாளர் உள்ளடங்கலான குழுவால் பெயரிடப்பட்ட தெஹிலந்தயாய கிராம அபிவிருத்தி குழுவிடமிருந்து கொள்வனவு அங்கீகாரம் பெற்று உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு குறித்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுவதற்காக கையளிக்கப்பட்டதாக. | அரசாங்க பெறுகை வழிகாட்டலின் ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிவுறுத்தல்களுக்கு இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | ஆனபல்லம ஹந்தபானாகல யானை அகழியின் இரண்டாம் கட்டணமாக கி.மீ 1.5 இனை அகழ்வதற்காக பிரதேச செயலாளர் வெல்லவாயவினால் தெஹிலந்தயாய சங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த போதிலும் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு 02 நாட்களின் முன்னர் ஒப்பந்த பெறுமதி ரூபா 1,587,217 இற்கு திணைக்களம் அச் சங்கத்துடன் உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட்டிருந்தது. | ஒப்பந்தத்தை விரைவில் மேற்கொள்வதற்குத் தேவையானமையால் குறித்த குழுவின் எழுத்துமூல அங்கீகாரம் தபால் மூலம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்னர் குறித்த குழுவின் வாய்மூல அங்கீகாரத்தில் குறித்த குழுவுடன் உடன்படிக்கை ஏற்படுத்திக்கொள்ளப்பட்டதாக. | பெறுகை வழிகாட்டலின் படி,முன்னங்கீகாரத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2019 முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது GIZ செயற்திட்டத்தால் வழங்கப்பட்டிருந்த ரூபா 20,755,328 பெறுமதியான சொத்துக்கள் திணைக்களக் களஞ்சியத்தின் இருப்புப் புத்தகத்திற்கு உள்ளடக்கப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவின் அங்கீகாரத்தின் படி, செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டதாக பதிவேடுகள் காணப்பட்டபோதிலும் பொறுப்பேற்றதாக திணைக்களத்தின் இருப்புப் புத்தகத்தில் இல்லாத விடயங்கள் தொடர்பாக பௌதீக ரீதியாகப் பரீட்சிக்கப்பட்டு குறித்த ஆவணங்களில் உள்ளடக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெறும் சகல பொருட்களும் இருப்புப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் கணக்காய்வுப் பரிந்துரை செயற்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | முத்துராஜவெல சுற்றாடல் முறைமையின் 1,285 ஹெக்டேயர் அளவான காணிப்பகுதி 1996 இன் 947/13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் சரணாலயமாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அப் சரணாலய எல்லைகள் குறிக்கப்படுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | குறித்த பிரதேசத்தின் ஓர் பகுதிக்கு எல்லைகள் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தின் முத்துராஜவெல சரணாலய எல்லைத் தூண்கள் குறித்த ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் குறித்த நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு பொலிஸாரது உதவியுடன் குறித்த பகுதியின் அளவீட்டை மேற்கொள்வதாக. | எல்லைகளை நிச்சயமாகக் குறிப்பிட்டு சரணாலயத்தை பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தென் மாகாண வலய அலுவலகத்தால் 2022 ஆம் ஆண்டின் போது வீதியின் இரு மருங்கிலும் கீழ்வனப்பகுதியை அகற்றுவதற்காக ரூபா 5,337,814 தொகையான 04 பெறுகை நடவடிக்கைகள் 2021 செப்தெம்பர் 29 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தகைமைகளைப் பரிசோதிக்காது சமூக சார்பான 03 அமைப்புகளுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் இதற்கு உரித்தான உடன்படிக்கைகளுக்கும் திணைக்களத்தால் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அத்தகைய தாமங்கள் ஏற்படா வண்ணம் குறித்த உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டதாக. | பெறுகை வழிகாட்டல்களின் படி, ஏற்ற ஒப்பந்தக்காரர்கள் தேர்வு செய்யப்பட்டு எழுத்து மூல உடன்படிக்கையின் அடிப்படையில் செயற்பாடுகளை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மின் வேலிகளை நிர்மாணித்தல் மற்றும் அதன் பராமரிப்பிற்காக 2021 ஆம் 2022 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 1,251,067,129 தொகையும் ரூபா 1,031,741,420 தொகையும் செலவிடப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி | அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக யானைகளின் வசிப்பிடங்கள் இழக்கப்பட்டமையால் நேர்ந்த இப் பிரச்சனைகளைக் குறைப்பதற்காக பாரிய | யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையேயான பிரச்சனைகளைக் குறைப்பதற்காக ஏற்ற உபாயமார்க்கங்களை |

| | | | |
|---|---|---|---|
| | வரையிலும் நிர்மாணிக்கப்பட்டிருந்த முழுமையான மின்வேலியின் நீள அளவு 4,756 கி.மீற்றர்களாகும். எவ்வாறெனினும், கடந்த 05 ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட யானைகளின் இறப்பு, மனிதர்களின் இறப்பு, ஆதன சேதங்கள் மற்றும் உடல் பாதிப்புகள், கருத்திற்கொள்ளப்படுகையில் மின் வேலி அமைக்கப்பட்ட போதிலும், யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையேயான பிரச்சனைகளில் குறைவை அவதானிக்க முடியாதிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது அவற்றில் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. | பணத்தைச் செலவிட்டு மின்கம்பிகளை நிர்மாணித்து பாதுகாப்பதுடன் காட்டு யானைகள் நடமாடும் பகுதிகள் மற்றும் அதனை அண்மித்த கிராமங்களில் நேரும் காணி பயன்பாட்டிற்காக காட்டு யானைகள் தாக்குவதனால் நேரும் மனித இறப்புக்களில் 50 சதவீதமானவை அளவிலான சதவீதம் மக்களின் கவனத்துடன் மேற்கொள்ளப்படுகின்றன. சுரணாலயத்திற்கு அண்மித்த பகுதியில் மேற்கொள்ளப்படும் பயிரினங்களுக்காக யானைகள் கவரப்பட்டு வீடுகளில் நெல் களஞ்சியப்படுத்தப்படுவது போன்ற விடயங்கள் தொடர்பாக ஆதன இழப்புகளும் உடல் ரீதியான இழப்புகளும் அதிகரித்துள்ளன. | ள அறிமுகப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 1,500 கிலோமீற்றர் நீளமான மின்கம்பி நிர்மாணிக்கப்படுவதற்காக தேவையான 194 பெரசவி மின்வலு கூடங்கள், 385 பெரசவி மலசல கூடங்கள் 3,080 கொங்கிறீட் கியூப்கள் மற்றும் உடவலவை பிரதேசத்தில் 500 மீட்டர் அளவிற்கு விரிப்பதற்காக காட்டு யானைகள் நடமாட்டத் தடுப்பிற்கான 6,000 தட்டுக்கள் ரூபா 87,308,715 இற்கு 90 நாட்களுக்குள் வழங்கப்படுவதற்காக அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, 2021 மார்ச் 15 ஆம் திகதி ரெடேகோ நிறுவகத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ரூபா 17,461,743 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 20,607,554 தொகையான பெறுமதிக்கு கட்டளையிடப்பட்டிருந்த அளவில் ஒரு பகுதி மாத்திரம் வழங்கப்பட்டதன் காரணமாக ஒரு வருடமும் 06 மாதங்களுக்கும் மேலான கால தாமதத்தை அடுத்து 2022 திசெம்பர் 30 ஆம் திகதி ஒப்பந்தம் இரத்துச் | இது வரையில் முற்பணப் பிணையை அறவிட்டுக்கொள்வதற்கு போதிய வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருப்பதனால் வழங்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் பொருத்தி முடிக்கப்பட்டதை அடுத்து இது வரையில் உடன்படிக்கை இரத்தாகி இருந்தமையால் அச் செயற்பாட்டை பூர்த்தி செய்துகொள்ள முடியும். | வழங்கப்பட்ட பொருட்களைப் பொருததும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

செய்யப்பட்டிருந்தது. வழங்கப்பட்டிருந்த பகுதிகளையும் பொருத்தி முடிப்பதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் 2,851 தொகையான அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் உள்ளபடியான ஊழியர்களின் எண்ணிக்கை 1,941 ஆனமையால் வெற்றிட எண்ணிக்கை 946 ஆகக் காணப்பட்டதுடன் இதில் 27 சிரேஷ்ட நிலையிலான வெற்றிடங்களாகக் காணப்பட்டன. குறித்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதற்கோ அல்லது நிலவும் பதவியணி எண்ணிக்கையைக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான இயலுமை தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியைச் சீராக்குவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்பிற்காக அங்கீகாரம் பெறப்பட்டதை அடுத்து வெற்றிடமாகக் காணப்பட்ட விரைவாக ஆட்சேர்ப்பை மேற்கொள்ளலாம். விஞ்ஞான சேவையில் உதவி பணிப்பாளர் பதவி வெற்றிடத்திற்காக உத்தியோகத்தர்களின் வெற்றிடத்திற்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்குமாறு பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு இது வரையில் ஓர் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | வெற்றிடத்தை நிரப்பிக்கொள்வதற்கோ அல்லது பதவியணியினரை திருத்திக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |